தினமலர்

# நெற்பயிரை தாக்கும் பூச்சியை அழிக்கும் முறை : வேளாண் துணை இயக்குனர் தகவல்

பதிவு செய்த நாள் : அக்டோபர் 23,2010,02:17 IST

நாமக்கல்: "நெற்பயிரை தாக்கி அழிக்கும் புகையான், வெண் புகையான் உள்ளிட்ட பூச்சிகளை இயற்கை எதிரி பூச்சிகளைப் பயன்படுத்தி அழிக்க வேண்டும்' என, வேளாண் துணை இயக்குனர் நடராஜன் தெரிவித்துள்ளார்.

**இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கை**: நெற்பயிரை தாக்கும் புகையான், வெண்முதுகு புகையான், குருத்தப் பூச்சி, இலை மடக்குப்புழு, பச்சை மற்றும் வெள்ளை தத்துப்பூச்சிகளை கட்டுப்படுத்த இயற்கை எதிரிகளைக் கொண்ட பூச்சிகளை பயன்படுத்த வேண்டும். எட்டுக்கால் சிலந்திகள் ஒவ்வொன்றும் ஒரு நாளைக்கு 10 முதல் 12 புகையான்கள் அல்லது வெண்முதுகுப் புகையான்கள் 3 முதல் 6, பச்சை மற்றும் வெள்ளை தத்துப்பூச்சிகள் இரண்டு குருத்துப் பூச்சிகள் அல்லது இலை மடக்குப் புழு ஐந்து களைக் கொன்று உண்ணும் திறன் வாய்ந்தது. எனவே, இதை வயலில் வளர்க்க வேண்டும். பொறி வண்டுகள் அதன் குஞ்சுகள் மற்றும் தாய் வண்டுகள், புகையான், தத்துப்பூச்சி அகவுனி, நெற்பேன், இலை மடக்குபுழு, மாவுப் பூச்சிகள், குருத்துப் பூச்சிகளை ஒரு நாளைக்கு இரண்டு முதல் 3 வரை கொன்று அழிக்கும்.

தரை வண்டுகள் ஒரு நாளைக்கு 8 முதல் 15 புகையான் மற்றும் தத்துப்பூச்சிகளை உண்ணும் திறன் பெற்றவை. பச்சை நாவாய்பூச்சி ஒரு நாளைக்கு 3 அல்லது ஐந்து புகையான் மறம் தத்தப்பூச்சிகளை கொன்று திண்ணும் திறன் வாய்ந்தது. விசித்தட்டான் இலை புகையான், தத்துப்பூச்சிகளை பிடித்து உண்ணும், மீதைல் பார்த்தியா, குயினால்பாஸ் மற்றும் செயற்கை பைரித்திராய்டு போன்ற பூச்சிக் கொல்லி மருந்துகளை நெற்பயிரில் பயன்படுத்தினால் மேற்கண்ட இயற்கை எதிரிகளுக்கு தீங்கு விளைவிக்கும்.நெல்லில் இலைப்புழுக்கள் கட்டுப்படுத்த டிரைகோ கிராம்மா கைலோனிஸ் என்ற மூட்டை ஒட்டுண்ணியை ஏக்கருக்கு 40 ஆயிரம் என்ற அளவில்

வயலில் தாய் அந்துப் பூச்சிகள் நடமாட்டம் தென்பட்டவுடனேயே விட வேண்டும். ஏக்கருக்கு ஐந்து விளக்குப் பொறிகளை வைத்து அந்திப் பூச்சிகளை கவர்ந்து அழிக்க வேண்டும்.அளவுக்கு அதிகமாக யூரியா உபயோகிக்கக் கூடாது. வயல் வரப்புகளை சுத்தமாக வைக்க வேண்டும். பொருளாதார சேத அளவுக்கு மேல் காணப்பட்டால் அருகில் உள்ள வேளாண் விரிவாக்க மையத்தில் உள்ள களப்பணியாளர்களிடம் ஆலோசனை பெற்று பூச்சிக் கொல்லி மருந்துகளை பயன்படுத்தலாம். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.இருக்கும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**மல்பெரி சாகுபடிக்கு மானியங்கள் அறிவிப்பு**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 23,2010,01:32 IST

தர்மபுரி: தர்மபுரி மாவட்டத்தில் அரசின் பல்வேறு மானியங்களை பெற்று மல்பெரி செடிகளை விவசாயிகள் பயிர் செய்திட பட்டு வளர்ச்சி துறை வேண்டுகோள் விடுத்துள்ளது.

பட்டு வளர்ச்சி துறை உதவி இயக்குனர் ஜெயவேல் வெளியிட்ட அறிக்கை: தர்மபுரி அரசு பட்டு கூடு அங்காடியில் பட்டுக்கூடுகளுக்கு நல்ல விலை கிடைப்பதால், பட்டு விவசாயிகள் பெரிதும் மகிழச்சி அடைந்து வருகின்றனர். மஞ்சள் இன பட்டுக்கூடுகள் சராசரியாக கிலோவுக்கு 250 ரூபாய்க்கும், வெள்ளை இன பட்டுக்கூடுகள் சராசரியாக கிலோ 300 ரூபாய்க்கும் பட்டு நூற்பாளர்கள் கொள்முதல் செய்வதால், தமிழகத்தில் பல மாவட்டங்களில் இருந்து தர்மபுரி பட்டு கூடு அங்காடிக்கு தினம் 3,000 கிலோ முதல் 4,000 கிலோ வரை பட்டு கூடுகள் விற்பனைக்கு வருகிறது.தர்மபுரி மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் மல்பெரி நடவு செய்ய அதிக அளவில் ஆர்வம் காட்டி வருகின்றனர். மல்பெரி நடவு செய்யும் விவசாயிகளுக்கு அரசு பல்வேறு மானிய சலுகைகள் வழங்கி வருகிறது.

அரசின் சலுகை பெற்று விவசாயிகள் கூடுதல் பரப்பில் மல்பெரி சாகுபடி செய்து அதிக லாபம் பெறலாம். நடவு மானியம் ஒரு ஏக்கருக்கு 4,125 ரூபாயும் வீதம் 2.50 ஏக்கர்

வரையில் 10,313 ரூபாய் வழங்கப்படுகிறது. தனிப்புழு வளர்ப்பு மனை கட்ட 1,500 சதுர அடிக்கு மனைக்கு 75,000 ரூபாயும், 1,000 சதுர அடிக்கு மனைக்கு 50,000 ரூபாய், 750 சதுர அடிக்கு மனைக்கு 25,000 ரூபாய் மானியம் வழங்கப்படுகிறது.சொட்டு பாசனம் அமைக்க ஒரு ஏக்கருக்கு மானியம் 15,000 ரூபாய் வீதம் 2.50 ஏக்கர் வரை 37,500 ரூபாயும், 30,000 ரூபாய் மதிப்புள்ள பட்டு புழு வளர்ப்பு தளவாட உபகரணம் இலவசமாகவும், பலமுனை பட்டு நூற்பு நிலையம் அமைத்தால் 75,000 ரூபாய் மானியமும், பட்டு தொழிலில் ஈடுபட்டுள்ள மகளிருக்கு ஆண்டுக்கு 15,000 ரூபாய் வரை மருத்துவ காப்பீடு இலவசமாக வழங்கப்படுகிறது. விவசாயிகள் மல்பெரி நடவு செய்து முன்னுரிமை அடிப்படையில் மானியங்களை பெற்று பயன்பெறலாம். இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

**கரும்பு விவசாயிகள்கோரிக்கை**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 23,2010,02:45 IST

மடத்துக்குளம்:அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலை கரும்பு பயிரிடுவோர் சங்கம் சார்பாக தமிழக அரசுக்கு பல்வேறு கோரிக்கைகள் வைக்கப்பட் டுள்ளதுமடத்துக்குளம், கணியூர், கடத்தூர், கொழுமம், பழநி, உடுமலை பகுதியில் உள்ள கரும்பு விவசாயிகள் ஒப்பந்த அடிப்படையில் ஆலைக்கு கரும்பு வழங்கி வருகின்றனர். இதுகுறித்து இச்சங்கதலைவர் வேலுசாமி கூறியதாவது:""சர்க்கரை ஆலையில் 30 ஆண்டுகளுக்கு மேலாக தினக்கூலியாக பணிபுரிந்து,வேறுபணிக்கு செல்ல இயலாமல் உள்ள 150 க்கும் மேற்பட்ட தொழிலாளர்களை பணிநியமனம் செய்ய வேண்டும்.2004-05 ஆம் ஆண்டு முதல்,2008-09 ம்ஆண்டு வரை ஆலைக்கு கரும்பு வழங்கிய விவசாயிகளுக்கு கூடுதல் விலை(5ஏ) வழங்க வேண்டும், 2008-09 ஆம் ஆண்டு கரும்பு வழங்கிய விவசாயிகளுக்கு டன் ஒன்றுக்கு ரூ.250 வீதம் கூடுதல் தொகை வழங்க வேண்டும், என கூறினார்.

**கோடி பயிர் நிவாரணத்தொகை வருகை**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 23,2010,02:30 IST

தஞ்சாவூர்: தஞ்சை மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம் கலெக்டர் சண்முகம் தலைமையில் நடந்தது.டி.ஆர்.ஓ., சுரேஷ்குமார், கூட்டுறவு மண்டல இணைப்பதிவாளர் சிவாஜி, வேளாண் இணை இயக்குனர் லோகநாதன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கலெக்டர் சண்முகம் பேசியதாவது: இந்தாண்டு கூட்டுறவு மூலம் 70 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது. கடந்தாண்டு இதே நேரம் 55 கோடிக்கு கடன் வழங்கப்பட்டுள்ளது. பெற்ற கடனை விவசாயிகள் 60 சதவீதம் மட்டுமே திரும்ப செலுத்தி உள்ளனர். கடனை திரும்ப செலுத்தினால் மீண்டும் மற்றவர்களுக்கு கடன் வழங்க ஏதுவாகும்.வேளாண் துறை மூலம் 17 சதவீதம் விதை மட்டும் வங்கப்படும். இந்தாண்டு 27 சதவீதம் சான்று பெற்ற விதை வழங்கப்பட்டுள்ளது. மேலஉளூர் பகுதியில் பாதிக்கப்பட்ட பயிருக்கு மத்திய தொகுப்பில் இருந்து 1.31 கோடி ரூபாய் நிவாரணம் வந்துள்ளது. இத்தொகை கூட்டுறவு வங்கி மூலம் 1,676 விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது.

மேட்டூர் நிலை கவலை அளிக்கிறது. மேட்டூருக்கு நீர் வரத்து நான்காயிரத்து 628 கனஅடி என குறைந்தும், வெளியேற்றம் 12 ஆயிரத்து 890 கனஅடியாக உள்ளது. இந்நீரை பகிர்ந்து கல்லணையில் இருந்து மூன்று ஆறுகளிலும் வழங்கப்படுகிறது. ராஜராஜன் 1000 முறையில் சாகுபடி செய்தால் நீர் தேவை குறையும். இந்தாண்டு 85 ஆயிரம் ஹெக்டேர் இம்முறையில் செயல்படுத்த வலியுறுத்தி வருகிறோம். இதனால், உற்பத்தி அதிகரிக்கும். செலவு குறையும்.விவசாயிகள் தங்கள் நிரந்தர வருவாய்க்கு கிரிராஜா கோழிக்குஞ்சு, ஆடு போன்றவைகளை வளர்க்கலாம். பஞ்சாப்பில் உள்ள ஒரு மாடு தினமும் 65 லிட்டர் பால் கறக்கிறது. இதை கால்நடைத்துறை அதிகாரிகள் மூலம் விவசாயிகள் அறிந்து பயன்பெறலாம்.இவ்வாறு அவர் பேசினார்.

தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்ட செயலாளர் சாமிநடராஜன், ""மத்திய அரசு பருப்பு, கோதுமை, கடுகு ஆகியவற்றின் கொள்முதல் விலை உயர்த்தியுள்ளது. நெல் குவிண்டால் 1,500 ரூபாயும், கரும்பு டன்னுக்கு 3,000 ரூபாயும் வழங்க வேண்டும். தனியார் உரக்கடைகளில் அரசு அனுமதி பெறாத உரங்கள் விற்பனைக்கு உள்ளன," என்றார்.வக்கீல் ஜீவகுமார், ""மன்னர் காலத்தில் வெட்டப்பட்ட ஏரி, குளங்களை பட்டியலிட்டு பெரிய கோவில் ஆயிரமாவது ஆண்டு விழாவின் தொடர்ச்சியாக

சமந்தான்குளத்தை மாவட்ட நிர்வாகம் தூர்வாரி உள்ளது. அதுவும் அரைகுறையாக உள்ளது. மற்ற குளங்களையும் தூர்வார வேண்டும்," என்றார்.

மதுக்கூர் சந்திரன், ""கடைமடை பகுதியான கல்யாண ஓடை, தம்பிக்கோட்டை வடகாடு பகுதிக்கு முறை வைக்காமல் தண்ணீர் விட வேண்டும்," என்றார். காவிரி விவசாயிகள் பாதுகாப்பு சங்க மாவட்ட செயலாளர் சுவாமிமலை விமல்நாதன், ""இரண்டு லட்சம் விவசாய மின் இணைப்பு வழங்க ஆணையிட்ட முதல்வருக்கு நன்றி," என்றார்.ரவிச்சந்தர், ""அரசு கொள்முதல் செய்யும் நெல்லுக்கு ஊக்கத்தொகை 200 ரூபாய் உடன் வழங்க வேண்டும். நெல் கொள்முதலில் நடக்கும் முறைகேடுகளை தடுக்க வேண்டும்," என்றார்.தோழகிரிப்பட்டி கோவிந்தராஜ், ""அனைத்து தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கத்திலும் விவசாயிகளுக்கு வட்டியில்லா பயிர் கடன், நகைக்கடன் வழங்க வேண்டும்," என்றார்.இவ்வாறு விவாதம் நடந்தது.

**உழவர்சந்தையில் காய்கறி வாங்குவோருக்கு பரிசு**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 23,2010,01:24 IST

சிவகாசி : சிவகாசி உழவர் சந்தையில் காய்கறி விற்பனையை அதிகரிக்கும் நோக்கில் காய்கறி வாங்குவோருக்கு கூப்பன் வழங்கி ஒவ்வொரு மாதமும் மாதத்தின் கடைசி வெள்ளியன்று குலுக்கல் நடத்தி மூவருக்கு பரிசுகள் வழங்கப்படுகிறது.உழவர் சந்தையில் மகளிர் சுய உதவிக்குழுக்கள் மூலம் 5, 10 மற்றும் 25 கிலோ அரிசி விற்பனையை ஒன்றிய தலைவர் வனராஜா துவக்கி வைத்தார். நிர்வாக அலுவலர் சுந்தரமூர்த்தி வரவேற்றார். உதவி நிர்வாக அலுவலர்கள் லட்சுமி காந்தன், வேல்முருகன் உள்பட மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

வெல்க தமிழ்

## அமெரிக்காவில் தேவை அதிகரிப்பால் கடல் உணவுப் பொருள்கள் ஏற்றுமதி உயர்ந்து வருகிறது



எஸ் சனந்தகுமார்

கொச்சி

அமெரிக்காவில் தேவை அதிகரிப்பால் நாட்டின் கடல் உணவுப் பொருள்கள் ஏற்றுமதி சிறப்பான அளவில் அதிகரித்து வருகிறது. மெக்சிகோ வளைகுடாப் பகுதியில் மீன் பிடிப்பு பணிகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன. இது, இந்திய இறால் பண்ணையாளர்களுக்கு சிறந்த வாய்ப்பாக அமைந்துள்ளது. ஏற்றுமதி அதிகரித்து வருவதற்கு இதுவும் ஒரு முக்கிய காரணமாகும்.

### 60 சதவீதம் உயர்வு

நடப்பாண்டின் ஏப்ரல் – ஆகஸ்டு மாத காலத்தில், அமெரிக்காவுக்கான கடல் உணவுப் பொருள்கள் ஏற்றுமதி, அளவின் அடிப்படையில் 60 சதவீதமும், மதிப்பின் அடிப்படையில் 68 சதவீதமும் வளர்ச்சி கண்டுள்ளது.

*சில ஆண்டுகளுக்கு முன்பு வரை மிகப் பெரிய இறக்குமதியாளராக இருந்த அமெரிக்காவின் பங்களிப்பு, சென்ற நிதி ஆண்டில், அளவின் அடிப்படையில் 5 சதவீதமாக சரிவடைந்தது. இந்தியாவின் சில வகை இறால்களுக்கு அங்கு பொருள் குவிப்பு வரி விதிக்கப்பட்டதே இதற்கு காரணமாகும். இந்நிலையில் மீண்டும் ஏற்றுமதி அதிகரிக்கத் தொடங்கியுள்ளது.*

*கடந்த 2004–05–ஆம் நிதி ஆண்டில், இந்தியாவிலிருந்து அமெரிக்காவிற்கு ரூ.426 கோடி மதிப்பிற்கு கடல் உணவுப் பொருள்கள் ஏற்றுமதி ஆகியுள்ளன. இது, சென்ற நிதி ஆண்டில் ரூ.211 கோடியாக சரிவடைந்துள்ளது. இதே காலகட்டத்தில், இந்தியாவின் மொத்த கடல் உணவுப் பொருள்கள் ஏற்றுமதியில், அந்நாட்டின் பங்களிப்பு 28 சதவீதத்திலிருந்து 10 சதவீதமாக குறைந்து போனது. அதாவது, 66,000 டன்னிலிருந்து 33,000 டன்னாக குறைந்துள்ளது.*

*ஏற்றுமதியாளர்கள்*

*கடந்த 2004–ஆம் ஆண்டில், பொருள் குவிப்பு வரி விதிக்கப்படுவதற்கு முன்பாக அமெரிக்காவிற்கு சுமார் 300 நிறுவனங்கள் கடல் உணவுப் பொருள்களை ஏற்றுமதியில் ஈடுபட்டு வந்தன. ஆனால் இந்த எண்ணிக்கை சென்ற ஆண்டில் 70–ஆக குறைந்து போனது. எனினும் மீண்டும் ஏற்றுமதியாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் என்ற எதிர்பார்ப்பு தற்போது ஏற்பட்டுள்ளது.*

*சென்ற நிதி ஆண்டில், பாரம்பரிய சந்தைகளான அமெரிக்கா, ஜப்பான் மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கான ஏற்றுமதி குறைந்தபட்ச வளர்ச்சி அல்லது எதிர்மறை வளர்ச்சி கண்டுள்ளது. அதே சமயம், தென் கிழக்கு மற்றும் மத்திய ஆசிய நாடுகளுக்கான ஏற்றுமதி சிறப்பான அளவில் அதிகரித்துள்ளது. இந்திய கடல் உணவுப் பொருள்களுக்கு இந்த நாடுகளில் வரவேற்பு அதிகரித்து வருகிறது.*

*சென்ற 2009–10–ஆம் நிதி ஆண்டில், நாட்டின் ஒட்டுமொத்த கடல் உணவுப் பொருள்கள் ஏற்றுமதி அளவின் அடிப்படையில் 10 சதவீதம் உயர்ந்து 6.64 லட்சம் டன்னாக அதிகரித்துள்ளது. ரூபாய் மதிப்பின் அடிப்படையில் ஏற்றுமதி 15 சதவீதம் வளர்ச்சி கண்டு, ரூ.9,921 கோடியாக உயர்ந்துள்ளது.*

*ஐரோப்பா*

*எனினும் சென்ற நிதி ஆண்டில், இந்தியாவின் ஏற்றுமதியில் ஐரோப்பாவின் பங்களிப்பு 24.7 சதவீதம் என்ற அளவில் அதிகமாக உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. சீனாவின் பங்களிப்பு 21 சதவீதமாகவும், ஜப்பானின் பங்களிப்பு 8.7 சதவீதமாகவும் உள்ளது. சென்ற நிதி ஆண்டில் தென்கிழக்கு ஆசிய நாடுகளுக்கான கடல் உணவுப் பொருள்கள் ஏற்றுமதி, அளவின் அடிப்படையில், 62 சதவீதம் உயர்ந்து 1.44 லட்சம் டன்னாக*

*அதிகரித்துள்ளது. மேலும் ரூபாய் மதிப்பில் 66 சதவீதமும், டாலர் மதிப்பில் 61 சதவீதமும் உயர்ந்துள்ளது.*

*இந்தியாவிலிருந்து அதிக அளவில் கடல் உணவு பொருள்களை இறக்குமதி செய்வதில் ஐரோப்பிய நாடுகள் முதலிடத்திலும், ஜப்பான் இரண்டாவது இடத்திலும் உள்ளன. அதாவது, ஏற்றுமதி வாயிலான மொத்த அன்னியச் செலாவணி வருவாயில் இந்த நாடுகளின் பங்களிப்பு முறையே 26 சதவீதம் மற்றும் 16 சதவீதமாக உள்ளது.*

*ஜப்பான் ஆர்வம்*

*நம் நாட்டின் 'பிளாக் டைகர்' வகையைச் சேர்ந்த இறால் வகை மீன்களை வாங்குவதில் ஜப்பான் நாட்டினர் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர்.*

*நடப்பு நிதி ஆண்டில் 250 கோடி டாலருக்கு (சுமார் ரூ.12,000 கோடி) கடல் உணவுப் பொருள்களை ஏற்றுமதி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. முதல் ஐந்து மாதங்களில் (ஏப்ரல் – ஆகஸ்டு) இப்பொருள்கள் ஏற்றுமதி சென்ற ஆண்டின் இதே காலத்தைக் காட்டிலும் 60 சதவீதம் உயர்ந்துள்ளதால். நடப்பு நிதி ஆண்டிற்கான ஏற்றுமதி இலக்கை எட்ட முடியும் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது.*

## அக்டோபர் 31–ந் தேதியுடன் நிறைவடையும் பருவத்தில் சமையல் எண்ணெய் இறக்குமதி 88 லட்சம் டன்னை தாண்டும்



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு

புதுடெல்லி

நடப்பு 2009–10–ஆம் எண்ணெய் பருவத்தில் (நவம்பர் – அக்டோபர்), செப்டம்பர் மாதம் வரையிலான 11 மாதங்களில் நாட்டின் சமையல் எண்ணெய் இறக்குமதி 80.42 லட்சம் டன்னாக உள்ளது. அக்டோபர் மாதத்தில் மேலும் எட்டு லட்சம் டன் இறக்குமதியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. எனவே நடப்பு பருவத்தில் இறக்குமதி 88 லட்சம் டன்னை தாண்டி விடும் என சமையல் எண்ணெய் உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இரண்டு மடங்கு அதிகரிப்பு

சென்ற நான்கு ஆண்டுகளில் இந்தியாவின் சமையல் எண்ணெய் இறக்குமதி இரண்டு மடங்கு அதிகரித்துள்ளது. கடந்த 2005–06–ஆம் ஆண்டு பருவத்தில் நாட்டின் சமையல் எண்ணெய் இறக்குமதி 44.16 லட்சம் டன் என்ற அளவில்தான் இருந்தது. இது, 2006–07 பருவத்தில் 56.08 லட்சம் டன்னாகவும், 2007–08 பருவத்தில் 81.83 லட்சம் டன்னாகவும் உயர்ந்தது. இந்த புள்ளிவிவரங்கள், ஒவ்வொரு ஆண்டிலும் இறக்குமதி அதிகரித்துக் கொண்டே வருவதை உறுதி செய்கின்றன.

சமையல் எண்ணெய்க்கான தேவைப்பாடு அதிகரித்துக் கொண்டே வருகிறது. கடந்த பத்து ஆண்டுகளில் பயன்பாடு ஆண்டுக்கு சராசரியாக 6.5 சதவீதம் அதிகரித்து 1.47 கோடி டன்னாக உயர்ந்துள்ளது. அதே சமயம், இந்த பத்து ஆண்டுகளில் எண்ணெய் வித்துக்களின் உற்பத்தி தேக்கநிலையில் உள்ளது. பயிரிடும் பரப்பளவு அதிகரிக்காததே இதற்கு முக்கிய காரணமாகும்.

நம் நாட்டில் தனிநபர் சமையல் எண்ணெய் பயன்பாடு ஆண்டுக்கு 12.70 கிலோ என்ற அளவில்தான் உள்ளது. இது, சர்வதேச சராசரி அளவான 20 கிலோவை விட மிகவும் குறைவானதாகும். எனினும், உள்நாட்டின் மொத்த சமையல் எண்ணெய் தேவையில், 50 சதவீதத்திற்கும் அதிகமான அளவு இறக்குமதி செய்யப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

உற்பத்தி – பயன்பாடு

இந்தியாவில் ஆண்டுக்கு 80 லட்சம் டன் சமையல் எண்ணெய் உற்பத்தி ஆகிறது. அதேசமயம், பயன்பாடு இதைக்காட்டிலும் இரண்டு மடங்கு அதிகமாக 1.60 கோடி டன்னாக உள்ளது. இந்தியாவின் சமையல் எண்ணெய் உற்பத்தி, நடப்பு எண்ணெய் பருவத்தில் 70 லட்சம் டன்னாக உயரும் என்று அமெரிக்க வேளாண் துறை முன்னறிவிப்பு செய்துள்ளது. இது, வரும் 2010–11–ஆம் ஆண்டு பருவத்தில், 13 சதவீதம்

*உயர்ந்து 79.10 லட்சம் டன்னாக அதிகரிக்கும் என்றும் தெரிவித்துள்ளது. குறிப்பாக, எதிர்வரும் பருவத்தில், கடுகு எண்ணெய், சோயா எண்ணெய் மற்றும் கடலை எண்ணெய் உற்பத்தி சிறப்பான அளவில் அதிகரிக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.*

## சேரம்பாடி அரசு தேயிலை தோட்ட கழக ஆஸ்பத்திரி அனைத்து மக்களும் பயன்பெறும் வகையில் நவீனப்படுத்தப்படும் அமைச்சர் செல்வராஜ் தகவல்

*பந்தலூர்,அக்.23–*

*சேரம்பாடி அரசு தேயிலை தோட்ட கழக ஆஸ்பத்திரியில் அனைத்து தரப்பு மக்களும் பயன் பெறும் வகையில் நவீனப்படுத் தப்படும் என வனத்துறை அமைச்சர் செல்வராஜ் கூறினார்.*

*டேன்டீ ஆஸ்பத்திரி*

*பந்தலூர் தாலுகா சேரம் பாடி அரசு தேயிலை தோட்டம் (டேன்டீ) ரேஞ்ச் எண்.1–ல் கார்டன் ஆஸ்பத்திரி உள்ளது. இந்த ஆஸ்பத்திரியில் சேரம் பாடி, சேரங்கோடு, கொளப் பள்ளி, நெல்லியாளம் பகுதியில் உள்ள அரசு தேயிலை தோட்ட தொழிலா ளர்கள் மருத்துவ சிகிச்சை பெற்று வந்தனர்.*

*74 உள்நோயாளிகள் தங்கும் வசதி கொண்ட சேரம் பாடி டேன்டீ ஆஸ்பத்திரியில் போதிய டாக்டர்கள் இல்லை. தற்போது 1 டாக்டர் மட்டுமே பணியாற்றி வருகின்றார். இதேபோல் மருத்துவ பணி யாளர்களும் நியமிக்கப்பட வில்லை. இதனால் ஸ்கேன், குழந்தை பிரிவு, அறுவை சிகிச்சை மையம் உள்பட பல்வேறு பிரிவுகளில் பணி யாற்ற பணியாளர்கள் இல்லா ததால் தோட்ட தொழிலா ளர்கள் சிகிச்சை பெற முடியா மல் அண்மையில் உள்ள கேரளாவுக்கு சென்று வருகின்றனர். இந்த பிரச்சினை குறித்து கடந்த ஆண்டு சேரம்பாடியில் ஆய்வு மேற்கொண்ட வனத்துறை அமைச்சர் செல்வராஜிடம் தெரிவிக்கப்பட்டது.*

*ஆஸ்பத்திரியில் வனத்துறை அமைச்சர் ஆய்வு*

*இதனால் சேரம்பாடி தேயிலை தோட்டக்கழக ஆஸ்பத்திரியை பார்வையிட்ட தமிழக வனத்துறை அமைச்சர் செல்வராஜ் உடனடியாக பழுதடைந்துள்ள ஆஸ்பத்திரி கட்டிடங்களை சீரமைக்க உத்தரவிட்டார். மேலும் ரூ.11 லட்சம் செலவில் ஆஸ்பத்திரி யில் சீரமைப்பு பணிகள் நடைபெற்று வருகின்றன.*

*இந்த பணியை வனத்துறை அமைச்சர் செல்வராஜ் நேற்று ஆய்வு செய்தார். பின்னர்*

ஒவ்வொரு வார்டாக சென்று பார்வையிட்டார்.

பின்னர் அவர் நிருபர்களிடம் கூறியதாவது:–

ஆஸ்பத்திரி நவீனப்படுத்தப்படும்

சேரம்பாடி அரசு தோட்ட கழக ஆஸ்பத்திரியில் தோட்ட தொழிலாளர்கள் மட்டுமின்றி வெளிப்புற மக்களும் மருத்துவ சிகிச்சை பெற நடவடிக்கை எடுக்கப்படும். மேலும் கூடுத லாக டாக்டர்கள், பணியா ளர்கள் நியமிக்கப்படும். தமிழ் நாட்டில் நீலகிரி, வால்பாறை யில் 10 ஆயிரம் அரசு தோட்ட தொழிலாளர்கள் பணியாற்றி வருகின்றனர். நீலகிரியில் 4 ஆயிரம் தொழிலாளர்கள் உள்ளனர். இவர்களுக்கு மருத்துவ வசதி மேம்படுத்தப்படும். மக்கள் மறுவாழ்வு துறை மூலம் சேரம்பாடி அரசு தோட்ட கழக ஆஸ்பத்திரியில் அனைத்து தரப்பு மக்களும் பயன்பெறும் வகையில் ஆஸ்பத்திரி நவீன மயமாக் கப்படும்.

இவ்வாறு வனத்துறை அமைச்சர் செல்வராஜ் கூறி னார். அப்போது கதர்வாரிய துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன், அரசு தேயிலை தோட்ட கழக இயக்குநர் கணேசன், மேலாளர்கள் சிவக்குமார், விக்ரம், ஜான்சன், பட்டத்து ராஜா, குன்னூர் எம்.எல்.ஏ. சவுந்திரபாண்டி யன், தி.மு.க. ஒன்றிய செய லாளர்கள் ராஜா, ராஜேந்திரன், நெல்லியாளம் நகர செயலாளர் திராவிடமணி, தலைமை செயற்குழு உறுப்பினர்கள் காசிலிங்கம், பாண்டியராஜ், கூடலூர் ஊராட்சி ஒன்றிய குழு தலைவர் ஜெயா, ஒன்றிய அவை தலைவர் சின்னப்பன் ஆகியோர் உள்பட பலர் உடன் இருந்தனர்.

வனத்துறை அமைச்சர் செல்வராஜ் இன்று (சனிக் கிழமை) முதுமலை மற்றும் அதன் சுற்றுப்புற பகுதிகளில் யானைகள் வழித்தடம் குறித்து ஆய்வு நடத்தப்பட உள்ளதாக கூறப்படுகிறது.

## மிளகாய் விதைக்க ஏற்ற பருவம் எது? வேளாண் பல்கலைக்கழகம் விளக்கம்

கோவை, அக்.23–

மிளகாய் விதைக்க ஏற்ற பருவம் எது என்று விவசாயிகளுக்கு கோவை வேளாண் பல்கலைக்கழகம் விளக்கம் அளித்து உள்ளது.

மிளகாய் வற்றல் ஏற்றுமதி

உலகில் உள்ள முக்கிய வர்த்தக பயிர்களில் மிளகாய் வற்றலும் ஒன்றாகும். உலக அளவில் மிளகாய் வற்றல் உற்பத்தி, நுகர்வு மற்றும் ஏற்றுமதியில் இந்தியா முதல் இடத்தில் உள்ளது. அதை தொடர்ந்து சீனா, பெரு, தாய்லாந்து, பாகிஸ்தான் மற்றும்

பங்களாதேஷ் ஆகிய நாடுகள் உள்ளன. இந்தியாவின் மொத்த உற்பத்தியில் 90 சதவீதம் உள்நாட்டிலேயே உபயோகப்படுத்தப்படுகிறது.

நறுமணப் பொருட்கள் வாரிய அறிக்கைபடி கடந்த 2008–09 ஆண்டை ஒப்பிடும் போது 2009–10 ஆண்டில் மிளகாய் வற்றலின் ஏற்றுமதி 19.4 சதவீதமாக அதிகரித்து உள்ளது. இந்தியாவின் மொத்த உற்பத்தியில் ஆந்திரா முதலிடம் வகிக்கிறது. அதை தொடர்ந்து கர்நாடகா, மேற்கு வங்காளம், ஒரிசா, மராட்டியம், மத்தியப்பிரதேசம் மற்றும் தமிழ்நாடு ஆகிய மாநிலங்கள் உள்ளன. தமிழ்நாட்டில் ராமநாதபுரம், நெல்லை, விருதுநகர், தூத்துக்குடி, சிவகங்கை மற்றும் திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களில் அதிக அளவில் மிளகாய் பயிர் செய்யப்படுகிறது. பொதுவாக தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழை தொடங்கிய பிறகே மிளகாய் விதைக்கப்படுகிறது.

விலை ஆய்வு

தமிழகத்தில் தற்போது விருதுநகர் சம்பா மிளகாய் வற்றல் குவிண்டாலுக்கு ரூ.3 ஆயிரம் முதல் ரூ.3,500 வரையிலும், குளிர்பதன கிடங்கில் வைக்கப்பட்டு உள்ள மிளகாய் வற்றல் குவிண்டாலுக்கு ரூ.4 ஆயிரம் முதல் ரூ.4,500 வரையிலும் விற்பனை செய்யப்படுகிறது. தமிழகத்தில் மிளகாய் பயிரிடும் விவசாயிகள் நடப்பு பருவத்தில் மிளகாய் பயிரிடலாமா அல்லது வேறு பயிர்கள் பயிர் செய்யலாமா என்று முடிவு எடுப்பதற்கு ஏதுவாக கோவை வேளாண் பல்கலைக்கழகத்தில் இயங்கி வரும் தேசிய வேளாண் புதுமை திட்டத்தின் உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தை தகவல் மையம் கடந்த 13 ஆண்டுகளாக விருதுநகர் சந்தையில் நிலவிய விலையை ஆய்வு செய்தது.

ஆய்வு முடிவுகளின் படி வருகிற 2011–ம் ஆண்டு பிப்ரவரி, மார்ச் மாதத்தில் அறுவடை செய்து சந்தைக்கு புதிதாக வரும் மிளகாய் வற்றல் குவிண்டாலுக்கு ரூ.3,500 முதல் ரூ.3,700 வரை விலை கிடைக்கும் என கணக்கிடப்பட்டு உள்ளது.

எனவே மேற்கண்ட விலையை கருத்தில் கொண்டு வடகிழக்கு பருவத்தில் மிளகாய் விதைக்குமாறு விவசாயிகளுக்கு வேளாண் பல்கலைக்கழகம் ஆலோசனை வழங்கி உள்ளது.